


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 26.10.2018

We Shine Academy™

guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்












# இந்திய நிகழ்வுகள்

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால், பெண் இயற்கை விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்கான, **இந்தியப் பெண்கள் இயற்கை விவசாயத் திருவிழாவின் 5வது பதிப்பு** அக்டோபர் 26 முதல் நவம்பர் 4ம் தேதி வரை **புது தில்லியில்** நடைபெறவுள்ளது.

- தீபாவளி கொண்டாட்டங்களுக்குப் பிறகு நாட்டின் சுற்றுச்சூழல் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதை, குறிப்பாக காற்று மாசுபாட்டை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட, **"ஹரித் தீபாவளி - ஸ்வஸ்த் தீபாவளி" (Harit Diwali – Swasth Diwali)** என்னும் பிரச்சாரத்தை மத்தியச் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை அமைச்சகமானது தொடங்கியுள்ளது.
    - மேலும் இப்பிரச்சாரமானது **"கிரீன் குட் டீட்" (Green Good Deed)** என்ற இயக்கத்துடன் இணைந்துள்ளது.

- இந்தியாவின் முதல் ஆடம்பர சொகுசுக் கப்பலான **"அங்கிரியா" (Angriya)** – ஆனது மும்பையில் தொடங்கப்பட்டது. மும்பையிலிருந்து கோவா வரை செல்லும் இந்த சொகுசுக் கப்பலை மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் தொடங்கி வைத்துள்ளது.
    - மராத்தா கடற்படையின் முதல் அட்மிரல் **கன்ஹோஜி அங்கிரே** என்பவரின் நினைவாக இக்கப்பலுக்கு "அங்கிரியா" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

# உலக நிகழ்வுகள்

- உலக வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள, குழந்தை இறப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அளவுருக்களைக் கொண்ட முதலாவது **மனித மூலதன குறியீடு – 2018ல் (HCI – Human Capital Index) இந்தியாவானது**, மொத்தம் 157 நாடுகளில் **115வது** இடத்தைப் பெற்றுள்ளது.
    - 2018 மனித மூலதன குறியீட்டு பட்டியலில் **சிங்கப்பூர் முதலிடத்திலும், தென் கொரியா இரண்டாம்** இடத்தையும் பெற்றுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை **பி.வி. சிந்து,** ஓரிடம் முன்னேறி **2ம்** இடம் பிடித்துள்ளார்.
    - சீன தைபேவின் டாய் ஸீயிங் இத்தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனையான **சாய்னா நெவால் 9வது** இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் **"மம்தா காலியா"**விற்கு 27வது **வியாஸ் சம்மன்** விருது அவரது **"டுக்ஹும் சுக்ஹாம்" (Dukkham Sukkham)** என்ற நாவலுக்காக வழங்கப்பட்டு உள்ளது.
    - 2009ம் ஆண்டில் வெளியான டுக்ஹும் சுக்ஹாம் நாவலானது கீழ் நடுத்தர வர்க்க குடும்பத்தின் மூன்று தலைமுறைகளின் சரித்திரம் பற்றியதாகும்.
- குறிப்பு:
    - **வியாஸ் சம்மன்** விருதானது **கே.கே.பிர்லா ஃ.பவுண்டேஷன்** மூலம் **1991ல்** நிறுவப்பட்டது.
    - முதன் முதலாக கவிஞர் ராம் விலாஸ் ஷர்மாவிற்கு **1991ல்** வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- புகழ்பெற்ற நீதிபதியான **பாலி எஸ். நாரிமனுக்கு,** பொது நிர்வாகத்தில் சிறப்புத்துவத்திற்கான **19வது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது** வழங்கப்பட்டுள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவரால் இவ்விருது வழங்கப்பட்டது.
- குறிப்பு:
    - 2017ம் ஆண்டு சுலாப இண்டர்நேஷனலின் நிறுவனர் பிந்தேஸ்வர் பதக்குக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- அமெரிக்காவின் மத்திய ஒழுங்குமுறை ஆணையத்தின் **(FERC)** தலைவராக அமெரிக்க வாழ் இந்தியரான **"நீல் சட்டர்ஜி-யை"**

அமெரிக்க அதிபர் டொனால் டிரம்ப் நியமித்துள்ளார்.

- மின்சாரம், இயற்கை எரிவாயு எரிபொருள் ஆகியவற்றை அனைத்து மாகாணங்களுக்கும் பரிமாற்றம் செய்யப்படுவதை ஒழுங்குபடுத்தும் தன்னிச்சையான அதிகாரம் கொண்ட அமைப்பாக **FERC – (Federal Energy Regulatory Commission)** செயல்படுகிறது.

## பொருளாதார நிகழ்வுகள்

- காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது **(IRDAI – Insurance Regulatory and Development Authority of India)** பொது மற்றும் சுகாதார காப்பீட்டு கோரிக்கைகளை தவணைகளாக செலுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக, IRDAI-ன் நிர்வாக இயக்குனர் **"சுரேஷ் மாத்தூர்"** தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது.